# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 21

[பதினேழு மற்றும் 21 வது அறிக்கையாக இணைந்து வெளிவருகின்றது]

பண்பாட்டுக் கழக வெளியீடு
(உறுப்பினர்களுக்கு மட்டும்)

## சங்கராச்சாரியார் - ஆதிசங்கராச்சாரியார்
## வரலாற்றுச் சிறப்புமலர்

(பதினெண் சித்தர்களின் குறிப்புகளிலிருந்து)



ஞானசித்தர் ஆதிசங்கரர்
[வெள்ளாடை மேனியான் உச்சிக் குடுமியான் தென்பாண்டித் தமிழன்
தமிழின் இந்து மதத்தைச் சமசுகிருத வறிந்து மதமாக்கியோன்]

வெளியீடு:- 26—9—85 காணிக்கை:- ரு 1-00

# எங்களுக்குத் தெரியும்' உங்களுக்கு..........!

1. பொய்யான ஹிந்து மதத்திற்கு மேல் போக்கான வண்ணப்பூச்சாக உருவாக்கப் பட்டது தான். அனைத்துக்கும் ஒரே பரம் பொருள் அனைத்து உயிர்களுக்கும் ஒரே ஆன்மா என்ற கருத்துக்களை உள்ளிட்ட **'அத்வைதம்'** என்ற தத்துவம் இந்த **'அத்வைதம்'** முழுமையானக் கற்பனை. இந்த 'அத்வைத' வாதிகளோ அனைத்து கோயில்களுக்கும் செல்கின்றனர். பாதாதிகேசம் கேசாதிபாதம்...என்று அங்கம், அங்கமாக வருணித்து போற்றி வாசகங்கள் கூறிப் பூசை செய்கின்றனர் ஒவ்வொரு கோயிலின் காலம, இறைவனின் வாழ்க்கை வரலாறு, தோற்றம், வடிவம்..... என்றும் பல கூறியும் வருகின்றனர்........இது எவ்வளவு பெரிய சூழ்ச்சி?

2 ஆதிசங்கரர் இந்தியாவில் நான்கு மடங்களே நிறுவினா என்பது வரலாறு. இன்றும கூட இந்தியாவில்உள்ள (பூரி, காலடி, காசி..,) நான்கு சங்கராச்சியர்களும் காஞ்சி சங்கராச்சாரியாரை ஏற்பதே இல்லை. தங்களில் ஒருவராக கருதுவமில்லை கும்பகோணத்தில் தோன்றிய சங்கரமடச் சத்திரத்தின் தொர்டர்புடைய 300 ஆண்டு வரலாறு கொண்டதே இன்றைய காஞ்சி சங்கரா மடம், ஆதிசங்கரருக்கும் காஞ்சி மடத்துக்கும் தொடாபு இல்லை. தக்க ஆதாரங்கள் உளளன விரைவில் வழங்குவோம் அறிக!

காவியுடையும், துறவறமும் தான் சமயநெறி என்று பொய்யான ஹிந்து மதவாதிகளால் உருவாக்கப்பட்டுவிட்டதால் அதை முறியடிக்க வேண்டிய கட்டம் வந்தது கி பி. 16ஆம் நூற்றுண்டில காவிரியாற்றங்கரை கருவூடுரின் குருவழி வாரிசுகளில் தோன்றிய **அகத்தியர்** என்பவர் பொய்யான ஹிந்து மதத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டி, மக்களின போக்கிலேயே சென்று திரும்ப வேண்டி காவியுடையையும், துறவறத்தையும் உண்மையான இந்துமதத்தில் கொண்டுவந்தார். அதன்படி முதன் முதலாக தருமபுர ஆதினத்தை உருவாக்கினர். தன்னிடமிருந்த **திருஞான சம்பந்தர்** என்பவரை **'திருஞான சம்பந்த மூர்த்தி'** என்று பட்டம் வழங்கி முதல் ஆதினமாக, மடாதிபதியாக உருவக்கினர். ஆனல் இம்மடாலயங்களும், மடத்துறவிகளும் 'வந்த வேலையை விட்டு பந்தக்காலை பிடித்த கதையாக' உண்மையான இந்து மதத்தின் கருத்துக்களை மககளிடையே கூறுமல், பொன்னுக்கும், பெணணுக்கும், பொருளுக்கும் ஆசைபடடு மடத்தினுள்ளேயே மக்கள் தொடர்பற்று வாழ்ந்திட்டனர். இதனல் தமிழர்களின் ஒற்றுமையும்.. இந்து மதமும் பாழ்பட்டன,

4 சில நூற்றுண்டுகளுக்கு முன்னல் தஞ்சை சரபோசி மன்னர் காலத்தில் திருக்கடையூர் கோயிலில் வாழ்ந்த 'அபிராமி பட்டர் என்னும் தமது 'அபிராமி-அந்தாதி' என்ற அருட்பாவினுல் அமாவாசை நாளில் முழுநிலவைக் தோற்றுவித்தார் என்று வரலாற்றுச் செய்தியே போதும், அருளுலகத்துக்கு பொய்யான ஹிந்து மதமும், சமஸ்கிருதமும் தேவையற்றது பயனற்றது .......... என்பது தெரியும.

5.. சில ஆண்டுகளுக்கு முன்னல் வெளிவந்த ''ஆதிபராசக்தி'' படத்தில் சமசுகிருதத்தின் ஏமாற்றுத்தனத்தை மிக எளிமையாக விளக்கிக் காட்டினூர்கள் அதாவது ''ஆதிபராசத்தி'' பூசைக்கு வர வேண்டும் என்று ஆரிய வேத விற்பன்னர்கள் சமசுகிருத மொழியில் பூசை செய்து கொண்டிருக்கும் போது சாதாரண மீனவன் தமிழ்ப்பாடலைப் பாட கேட்டு நேரில் தோன்றி அருள் தருகின்றுள் ''தமிழ் மொழிக்கு அருளாற்றல் உண்டு, சமசுகிருதத்திற்கு இல்லை'' என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டிய உண்மை எத்தனை பேருக்கு புரிந்தது?

# திருவள்ளுவரின் கடவுட் கொள்கை


அதாவது பதினெண் சித்தர்களே; தாத்தாக்களே போற்றி; ஆத்தாக்களே போற்றி! என்று முதலில் ஆணையும், பின் பெண்ணையும் முறைப்படுத்தி வழிபடுகிறார்கள், இவர்களுடைய கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் தான் இப்படிச் சிவலிங்க வழிபாட்டை தங்களது பூசாமொழி வாசகங்களில் தாத்தாக்களே போற்றி! ஆத்தாக்களே போற்றி! என்பதன் மூலம் தொடர்ந்து நிலைநாட்டி வருகிறார்கள். திருவள்ளுவர் நவநாத சித்தர் என்பதால் முதலில் பெண்ணையும், பிறகு ஆணையும முறையாக வைத்தே தனது இலக்கண இலக்கியங்களைப் படைத்தார். அவர் படைத்தனவற்றில் திருக்குறள் ஒன்று தான் உலகறிய காணக்கிடக்கின்றது என்பதால் திருக்குறளின் கடவுள் வாழ்த்தைச் சான்றாகக் கொண்டே திருவள்ளுவர் ஒரு நவநாத சித்தர் தான் என்ற கருத்தை முடிவு செய்யலாம் அதாவது அவருடைய கடவுள் வாழ்த்தில்

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு."-

—என்ற திருக்குறளில் ஆதி என்று பெண்ணை முதலிலும், பகவான் என்று ஆணை இரண்டாவதாகவும் தான் குறிக்கின்றார், இங்கு பிற மண்ணினரான பிராமணர்களான வட ஆரியர்கள் ஆதி என்பது திருவள்ளுவரின் தாய் பெயரென்றும், பகவன் என்பது திருவள்ளுவரின் தந்தை பெயரென்றும் சூழ்ச்சியாகக் கூறி சதிவேலை செய்திருக்கிறார்கள் அதாவது இந்து மதத்தை தோற்றுவித்த பதினெண் சித்தர்களில் பகலவன் எனப்படும் [பகவன் [அ] பகவான்] சூரியனை வழிபடும் காகபுசுண்டர் பரம்பரை என்ற ஒன்றும், சந்திரனை [ஆதி = திங்கள் = படைப்புக்குத் தேவையான அனைத்துச் சத்திகளையும் வழங்கும் சந்திரனே ஆதி என்பது பதினெண் சித்தர்களின் இந்து மதச் சொல ] வழிபடும் கருவூறார் என்றொரு பிரிவும் என்று இரண்டு பிரிவுகள் தான் உண்டு இவர்களில் சந்திரனை வழிபடும் கருவூறார்கள் தான் தந்தரம், தந்திறம், தந்திரம், தாந்தரம் தாந்தரீகம், எந்தரம், எந்திறம், எந்திரம், ஏந்தரம், ஏந்தரீகம்...... என்பனவற்றைச் செய்து இந்து மதத்திற்கு ஆதியாக உள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும், வழிபடுநிலையினர்களையும், அருளாளர்களையும், அருட்பட்டதாரர்களையும், ............உருவாக்குபவர்கள, எனவே, சந்திரனை வழிபடுவது கருவூறார்களை வழிபடுவதாகும, கருவூறார்கள் தங்களுடைய அனைத்துவகையான பத்தி, சத்தி, சித்தி, முத்தி பூசைகளையும், ஏழு பருவத்துப் பெண்களைப் பயன்படுத்திச் செய்யும தாந்தரீகப் பூசையின் மூலம் தான் நிறைவு செய்து கொள்வார்கள் எனவே கருவூறாரை வழிபடுவது பெண்ணை வணங்குவதாகும். மேலும் பதினெண் சித்தர்களின் தத்துவப்படி சந்திரன் பெண் தன்மை நிறைந்த அதாவது தாய்மையாற்றலை உடைய ஒளியை வழங்குகின்ற ஒன்றாகும், எனவே, பதினெண் சித்தர்களின் புராண இதிகாசக் கருத்துக்கள் சந்திரனைப் பெண்ணாகவே உருவாக்கப் படுகின்றன.

குறிப்பு;- பிறமண்ணினரான பிராமணர்களான வட ஆரியர்கள் தங்களுடைய வேத மத அடிப்படையில் உருவாக்கிய பொய்யான ஹிந்து மதத்தின் புராண், இதிகாசங்களில் சந்திரனை ஆணாகவும், அவனுடைய மனைவிகளாக 27 விண் மீன்களையும் உருவகம் செய்துள்ளனர் இது ஒரு பெரிய குறிப்பிடத் தக்க கருத்தாகும இக் கருத்து மெய்யான இந்து மதத்துக்கும், பொய்யான ஹிந்து மதத்துக்கும் இடையேயுள்ள முரண்பாட்டையும், மாறுபாட்டையும், வேறுபாட்டையும் விளக்குகின்றது] அதனால் தான், நவநாத சித்தரான திருவள்ளுவர் சந்திரனைக்குறிக்கும் ஆதி என்ற சொல்லை பெண்ணைக்குறிக்கும் சொல்லாக ஏற்றுத் திருக்குறளில் பயன்படுத்தியுள்ளார்.

தொடரும்



# இந்தியாவில் மார்க்சீயம் - 3

சித்தர் கருவூரூர்

எங்கெல்சு பாரிசில் 'புருதோனி' இசத்திற்கு எதிராகவும் விஞ்ஞானக் கம்யூனிசத்திற்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்த நேரத்தில் பிரசெல்சில் மார்க்சு திரு. புருதோனின் 'வறுமையின் தத்துவம்' என்ற நூலுக்கு விடையாகத் 'தத்துவத்தின் வறுமை' என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1845 சூலை 12-இல் கார்ல் மார்க்சு, இங்கிலாந்தின் பொருளாதார நிலை, அரசியல் நிலை, தொழிலாளர் இயக்க நிலை, முதலியவற்றை நேரில் கண்டறிவதற்காக 'எங்கெல்சுடன்' இங்கிலாந்து சென்றார். அங்கு பொருளாதாரம் பற்றிய ஆங்கில இலக்கியங்களைப் படிக்கவும், இலண்டனில் இருந்த சார்டிசிட் இயக்கப் பிரமுகர்களையும், 'நேர்மையாளர் லீகின்' தலைவர்களையும் சந்தித்துப் பழகிடவும் செய்தார். இந்த அனுபவங்கள் அவரை இலண்டன் மீது ஒரு பற்றினை வளர்த்தது. இரண்டாம் முறை 'கம்யூனிசிட் லீகின்' மாநாடு இலண்டனில் நடைபெற்ற பொழுது 'கம்யூனிச அறிக்கை' தயாரிக்க அழைப்பினைப் பெற்றார்கள்.

பின்பு எங்கெல்சும், மார்க்சும் கூட்டாகத் தயாரித்த 'கம்யூனிச அறிக்கை' 1848 ஆம் ஆண்டு பிப்ரவரியில் 'கம்யூனிசிட் லீகின்' ஆணையின் பேரில் 'கம்யூனிசிட் கட்சியின் அறிக்கை' என்ற முதல்முதல் ஆதாரப் பூர்வமான, அதிகாரப் பூர்வமான மனித இனத்திற்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகத் துவங்கப் பெறும் போராட்டத்தின் அடிப்படையை இவ்வறிக்கை வெளியிட்டது இவ்வறிக்கை-யில்......... போராட்டம் வரலாற்று ரீதியில் முடியப் பெறும் தன்மையுடையது தொழிலாளர்களின அசைவுகள், செயல்பாடுகள், தன்னிச்சையான வடிவங்களிலிருந்து நாடு தழுவிய அளவில் அதனுடைய ஓர் அமைப்பு மட்டத்திற்கு வெவ்வேறு நாடுகளின் உழைக்கும் மக்களிடையே சோதர சர்வ தேசியப் பிணைப்புக்களை நிறுவுவதற்கு வளர்ச்சியுறுகிறது......... வர்க்கப் போராட்டம் முதலாளித்துவ ஒடுக்கு முறையைப் புரட்சிகரமாக ஒழித்துக் கட்டுவதற்கு இட்டுச் செல்வது நிச்சயம்......... என்றும் எடுத்துக் காட்டினார்கள். மேலும்......... கம்யூனிசத்தின் தத்துவார்த்த முடிவுகள்; ஏற்கனவே இருந்து வரும் வர்க்கப் போராட்டத்திலிருந்து நமது கண்களுக்கு நேரிலேயே நடைபெற்று வரும் ஒரு வரலாற்று ரீதியான இயக்கத்திலிருந்து எழுகிற நடைமுறை உறவுகளை பொதுவாகக் குறிக்கப்படுகின்றது மார்க்சும், எங்கெல்சும் விஞ்ஞான ரீதியான முன் அறிதலையும் அடிப்படையாகக் கொண்டிட்டனர்......... 'ஒவ்வொருவரும் அவரவர் தேவைகளுக்கு ஏற்பப் பெறுவது'......... என்ற மகத்தானக் கோட்பாட்டை வகுத்தார்கள்,

பின்னர் மென்மேலும் தங்களின் ஆராய்ச்சிக் கருத்துக்களினை பரப்பத் திட்டமிட்டு 23-8-1847 இல் பிரசெல்சில் மார்க்சும எங்கெல்சும் 'செர்மன் தொழிலாளர் சங்கத்தை' அமைத்து அதில் 'விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவத்தை' விளக்கியுரைத்து வளர்த்திட்டனர். அந்த காலத்தில்தான் (27 9 1847 இல்) இவர்கள் இருவரும் பிரசெல்சில் 'குடியரசுச் சங்கம்' என்ற ஒன்றை அமைத்து அதன் மூலம் இதர நாடுகளிலுள்ள குடியரசு சங்கம்' என்ற ஒன்றை அமைத்து அதன் மூலம் இதர நாடுகளிலுள்ள குடியரசுத் தத்துவ இயக்கங்களுடன் தொடர்பு கொண்டனர். குறிப்பாக இலண்டனில் இருந்த 'சகோதரக் குடியாட்சித் தத்துவவாதிகள்' என்ற சங்கத்தோடு அதிகத் தொடர்பு கொண்டனர். கார்ல் மார்க்சு பிரசெல்சில் இருந்த குடியரசுக் சங்கத்துக்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

...தொடரும்.

# அருட்கேணி நீர் குவளைகள்......................!
# தமிழின மறுமலர்ச்சிப் போர்-3

இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும், , இனத்திலும் தோன்றிடாத மிகப்பெரிய சிந்தனைச் சிற்பி, சீர்திருத்த மாவீரர் பெரியார் ஈ.வெ.ரா, என்ற பேருண்மையை நினைவில் கொண்டுதான் தமிழன மறுமலர்ச்சி பணியினை மேற்கொள்ள வேண்டும் நாம். இல்லாவிட்டால், செயற்கரிய பெரிய மிகச் சிறந்த உயரிய சாதனைகளால் ஒரு 'யுகப் புரட்சியை' செய்து சென்ற பெரி-யாருக்கு நன்றி செலுத்தத் தவறிய மாபெரும் குற்றவாளிகளாவோம் நாம்.

சாக்கிரடீசும், இங்கர்சாலும், கார்ல் மார்க்சும்......... பெற முடியாத மாபெரும் வெற்றியினைப் பெற்றவர் பெரியார் ஈ.வே.ரா. இவர் தன் காலத்தில் துணிவும் வீரமும் ஈகமும பொறுப்பும் கட்டுப்பாடும் ஒற்றுமையும்......... நிறைந்த ஒரு தொண்டர்படையை உருவாக்கிட்டார். இதே போல் உலக வரலாற்றில் வேறு எந்த சிந்தனையாளரும் சாதித்தது இல்லை. இச் சாதனையின் எதிரொலி, செயல் வீச்சு, எண்ண அலை, கருத்தொளி......... பல நூற்றுண்டுகளுக்கு இருந்தே தீரும் இதுபற்றி இன்றைய தமிழர்களில் எவருமே சரியான அறிவோ, உணர்வோ, கணிப்போ பெற்றிடவே இல்லை. ஆனுல், நமது நினைப்பும் உழைப்பும் பெரியாரின் இம்மாபெரும் செயற்கரிய சாதனையை அடிப்படையாகவும, உள்ளீடாகவும, உறுதுணையாகவும் கொண்டே இருந்திடும்.

நண்பா! நான் பெரியாரைப் பற்றி இவ்வளவு சொல்வதற்குக் காரணம் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குரு மகா சன்னிதானம் சித்தர் அமரா-வதி ஆற்றங்கரைக் கருவூரர் தனியொரு மனிதராகத் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரீகம்......... முதலியவற்றின் தனித்தன் மைகளையும் உரிமைகளையும் பெருமைகளையும் காத்திட எடுத்துக்கொண்ட முயற்சி-கள் பெருமளவில் தோற்றுலும் 'பதினெண் மேல் கணக்கு நூல்கள்' 'பதினெண் -கீழ் கணக்கு நூல்கள்' 'ஐம்பெருங்காப்பியங்கள்' 'ஐஞ்சிறு காப்பியங்கள்'...... என்ற இலக்கியங்களாவது காப்பாற்றப்பட்டன. இதேபோல் பதினேராவது பதி-னெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவுரர் தமிழர் நலங்காக்க எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகள் ஒரு மாபெரும் சோழப் பேரரசை (கி.பி. 785-1040)யே உருவாக்கிய போதிலும், இவ்வரசர் -கள் ஆரிய அடிமைகளாக சமசுகிருத அடிமைகளாக மாறியதால் இவருக்கு மா -பெரும் தோல்வியே ஏற்பட்டது. இருப்பினும் இவரால் ''நாலாயிரத் திவ்விய பிர பந்தங்கள்',' வரலாற்று நூல்கள், 'மருத்துவ நூல்கள், 'அறிவியல் நூல்கள், கலை நூல்கள்............முதலியவை காக்கப்பட்டன. இத்துடன் தஞ்சை பெரிய கோயில் முதலாக [48] நாற்பத்தெட்டுக் கோயில்கள் கட்டப்பட்டன. இவருக்குப் பிறகு தமிழின ஆரிய இனப்போராட்டம்' (The conflict of the Tamilian Race and the Arian Race) உயிர் பெற்றிட்டது. தந்தை பெரியார் ஒரு சில வன்மையான, கடுமை யான, நாகரீகம் கடந்த மத எதிர்ப்புக் கருத்துக்கள்: அவருக்குத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஆதரிக்காமல் செய்துவிட்டன.

அதனுல் அவர் தமது வாழ்நாள் முழுவதும் எதிர் நீச்சல் போடுவதிலேயே கழித்திட்டார் இருப்பினும் அவர் ஆரம்பித்து வைத்த தமிழர் நலங்காகும் பணி யை முடித்து வைக்க வேண்டிய நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேம் நாம் எனவே தான் ''ஆரம்பமும் முடிவும்'' என்ற தலைப்பிலேயே பல அஞ்சல்களையும் கட்டுரை களையும் பெரியார் பற்றி எழுதியுள்ளேன் நான்.

தொடரும்

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்-3

இந்த அளவு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும், தெரிந்த ஓர் பெரிய அருளாளராக, விளங்கிய அருட்பெருஞ்சோதி ஆண்டவர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் தொகுக்கப் படாமல் போனது ஏன்? வள்ளல் பெருமான் காசிக்கும், பூரி சகன் நாதர் ஆலயத்திற்கும் சென்று வந்திட்டார் என்ற குறிப்பு கிடைக்கும் போது அவர் ஏன் பனிமூடிய இமயமலைப் பகுதிகளில் நடந்து திக்கயிலாயத்தைச் சென்றுப் பார்த்திருக்க மாட்டார்? பாரதப்போர் நடந்த குருசேத்திரத்தையும், பிருந்தாவனத்தையும், இராமனின் அயோத்தியையும், அவர் பார்த்து வந்த வரலாறு ஏன் மறக்கடிக்கப் பட்டது; அவ்வளவு ஏன் அவர் அடிக்கடி சிதம்பரம், திருவண்ணாமலை, சீர்காழி, திருவானைக்காவல், மதுரை இராமேச்சுவரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், கன்னியாகுமரி...........முதலிய இடங்களிலும் சென்று வழிபாடு நிகழ்த்தியதையே, தமிழகத்து மக்கள் மறைத்துவிட்டார்கள். மறைப்பதற்குத் துணை செய்து விட்டார்கள் மறந்து விட்டார்கள். இவற்றை எண்ணிப்பார்ப்போமானால் தான் உண்மையான இந்துமதம் பொய்யான ஹிந்துமதம் என்ற இரண்டு பெரிய போராட்ட சக்திகளைப் பற்றிய புரிந்து கொள்ள முடியும். அதாவது, இந்து மதத்தில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும், தமிழ் அருளாளர்களுக்கும், தமிழர்களால் வழி படக்கூடிய வழிபாட்டு நிலையங்களுக்கும். சன்னிதானங்களுக்கும், கடவுள்களுக்கும், தமிழின மடாதிபதிகளுக்கும், பீடாதிபதிகளுக்கும், ஆச்சாரியார்களுக்கும், குருக்களுக்கும், குருமார்களுக்கும், சாத்திரிகளுக்கும் சித்து விளையாடல்காரர்களுக்கும்........... சமசுகிருத வெறிபிடித்த பிறமண்ணினரான பிராமணரால் கட்டுக் கோப்பாக அவமதிப்பும், புறக்கணிப்பும், இழிவும், பழியும், தொல்லையும், இருட்டடைப்பும், இன்னலும், மறைமுக எதிர்ப்பும், மறுப்பும், ஏச்சும், பேச்சும், ஏளனமும், பகடியும், பகையும், தொடர்ந்து அடைமழைபோல்நிகழ்த்தப்பட்டு வருவதை உணரலாம். அதாவது, இம்மண்ணுலகில் தோன்றிய அருளாளர்களில் எவருமே எழுதிக்காட்டாத அளவிற்கு செத்தாரை எழுப்புதல் தம்மால் முடியுமென்று கருத்தை எழுதிக்காட்டினர். அதுவும் சிதைந்து; செல்லரித்து எலும்புத தொகுதியைக் கூட வனப்பும், வலிப்பும், உடைய ஊன உடம்பு பெற்று உயிர்த்து எழச் செய்யுமாற்றல் தான் உடம்பின் மீது போர்த்திக் கொண்டிருக்கக் கூடிய போர்வையின் தெய்வீக ஆற்றலால் நிகழும்.

''ஊன் புரிந்து மீள உயிர்பித்தல்
தான் மேற் போர்த்த கம்பளத்தால்
ஆகும் களித்து.........''

என்று மிகத் துணிவோடும், தன்னடக்கத்தோடும், தன்னுடைய உடம்பைத் தொட்ட ஆடைக்குக் கூட (உயிரற்ற பொருளுக்குக்கூட தெய்வீகத்தன்மை உண்டு என்பதை) ஆணித்தரமாக விளக்குகிறார். ஆனால், அவரைச்சுற்றி இருந்தவர்களில் யாருக்கும் அவருடைய மேலாடையை பரிசாகப் பெறும் தகுதி இருக்கவில்லை. அது தான் வேதனை அவர் மிகத் தெளிவாக மரணமிலாப் பெருவாழ்வு பற்றியும், காயசித்தி பற்றியும், பொன்னுடல் பற்றியும், இறைவனின் திருக்கரத்தால் அமுதம் பெற்றுண்டது பற்றியும்..........மிகமிகத தெளிவாக விளக்கி உரைக்கிறார். இப்படிப் பட்ட, இவரைச்சுற்றி பழமரத்துப் பறவைகள் போல்எந்நேரமும், பத்தர்கூட்டமிருந்தது. ஆனால் அவர்கள் இவரை முழுமையாகப் புரிந்து விரும்பி ஏற்று அருட் பயனைத்துய்க்க வில்லை இவரும் தான் அருளுலகில் வாழையடி வாழையெனத் தோன்றிய பழமரமாக இருந்தும், பத்தர்கள் தன்னை பயன்படுத்திக் கொள்ளவில்லையே "என்றும் வருந்தினர்.

தொடரும்

# அன்புள்ள சேவுகனுக்கு.................!

அன்புச் சேவுக!

இன்றைய நிலையில், நாம், இனவெறியையோ! மொழிவெறியோ! மத வெறியையோ! வன்முறை வெறியையோ! தூண்டி விடுவதாகவோ ஊக்குவிப்பதாகவோ எளிதாகக் குற்றம் சாட்டப்பட்டு விடலாம். எனவே தான், நாம், மிகமிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் நேரடியாகவும் நமது கொள்கைகள், குறிக்கோள்கள், திட்டங்கள்.........முதலியவற்றை விளக்கியாக வேண்டும், இதற்காகவே, நாடெங்கும் கையெழுத்துப் பிறதி நூலகங்கள் துவக்கி வைக்கின்றோம்; நம்மவர்கள் தனித்தோ! குழுக்களாக இணைந்தோ வசதி வாய்ப்புப்படி அனைத்துவகையான வழிபாட்டு நிலையங்களிலும், பிறபொது இடங்களிலும் கூடி நின்று உரையாடல் முறையிலும்; வினாவிடை முறையிலும், கலந்துரையாடல் விவாத முறையிலும், நம்மையும், நமது இயக்கத்தையும் அறிமுகப் படுத்த வேண்டுமென்று முயலுகின்றோம் இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் தொடர்ந்து மேற்படிச் செயல்கள் நிகழுமாறு செய்வதுதான் இன்றைய தேவை!

நண்ப! நாம், திருவள்ளுவர், 'திருமூலர், சமயக்குரவர், சங்கராச்சாரியார், பெரியார் ஈ வெ ரா, புத்தர், மகாவீரர், ஏசு, முகம்மது நபி, காரல் மார்க்சு, கரம் சந்தி மோகன்லால் காந்தி........முதலிய அனைவரின் சிறப்பு இயல்புகளை எல்லாம் நமது தாயகத்து மக்களுக்குத் தேவையான அளவு எடுத்துக் கூறியே செயல் படுகின்றோம்

தமிழினத்திற்கே உரிய 'இந்து' என்ற சொல்லையும்: இதற்குரியப் பொருளையும் புரிந்து கொள்ள முயலாமலே வெறுப்பது: பிற இனத்தவர்களும், பிறமதத்தவர்களும், பிற மொழிகளும் தான் உயர்ந்தவர் என நினைக்கும் அப்பாவித் தனம்..........முதலியவைகள் அனைத்தும் முழுமையாக அகற்றப்படுவதற்குரிய முழுமையான முயற்சி தான் இக்கலி உலகத்தில் தோன்றிய பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோற்றுவித்த 'இலக்கிய புரட்சி'; ['தத்துவப்புரட்சி' 'கருத்துப்புரட்சி, எண்ணப்புரட்சி] அதாவது மதத்துறையில் தோற்றுவிக்கப்பட்டத் தீயவைகளும் காலப்போக்கில் தோன்றியத் தீயவைகளும் தான் நமது மக்களின் வீழ்ச்சிகளுக்கும் தாழ்ச்சிகளுக்கும் காரணம் என்பதை முழுமையாக உணர்ந்ததால் தான்: இரு பதினெண் சித்தர் பீடாதிபதிகளும்' 'குருபாரம்பரியம்' என்ற பெயரால் மத வரலாறும், இலக்கியப் பாரம்பரியம்' என்ற பெயரால் சமுதாய வரலாறும் 'அரச பாரம்பரியம்' என்ற பெயரால் ,தமிழ்நாட்டு அரசியல் வரலாறும்' எழுதித்தொகுத்துக் கருத்துப் புரட்சியைத் தோற்றுவித்தனர்.

இப்படி, அவர்கள், இலக்கியக் கருவூலத்தைத் தந்து விட்டுச் சென்றுள்ள காரணத்தில் தான்; நம்மால், அவற்றை எளிதில் அறிந்து புரிந்து பகுத்து வகுத்துப் செயல் பட ஏதுவாக அமைகின்றது, இந்த எழுத்துலகத் தொகுப்பே தான் நமது புரட்சிக்குரிய ஆயுதங்கள் இவைகளே தான் நாம், எதிர்காலத்தில் நிகழ்த்தப்போகும் அருளாச்சிக்குரியப் போர்ப்பாசறைகளாகவும் பாடி வீடுகளாக அமையும்

நமது மொழி, இன, நாட்டு வரலாற்று இலக்கியங்களை நம்மவர்கள் படித்துணர்ந்தால் போதும்: முதலில் நம்மவர்கள் அறிவொளியும், அக வொளியும் பெற்றுத் திகழ்ந்திடுவார்கள். மக்களின் அறியாமையையும், கோழை மனத்தையும், கூலிமனப்பான்மையையும்,........போக்க இக் கருத்துக்களை மக்களிடையே மேடைப் பேச்சாக வழங்க வேண்டும். நமது இயக்கப்பணி (அ) கொள்கை (அ) திட்டம் என்பது வேறொன்றுமல்ல: நமது இன மொழி நாட்டு வரலாற்றினை நமது தாயகத்து மக்களை உணரவைப்பதே ஆகும் இம் மாபெரும் பணிக்குத் தயாராகும் நம்மவர்கள், கையில் பிடித்திருக்கும் வாள்களும் வேல்களும் விற்களும் நமது இலக்கியங்களேயாகும் என்னும் கருத்துச் சிந்தனை வளம் பெற்றதாக இருக்க வேண்டும்

அன்பு- ஞாலகுரு சித்தர் கருவூரார்.



# ஆதி சங்கரர் வரலாறு

**[கருவூரூர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளை அவர்கள்]**

*'ஆதிசங்கரர்'—என்ற பெயர் இவர்தான் முதல் சங்கரர் என்ற பொருளில் வழங்கப்பட்டது அல்ல! ஆதி சிவன், ஆதி சங்கரன், ஆதி பரமசிவன், ஆதிவேதன், ஆதிநாதன்.........என்ற பெயர்கள் சாதாரணமாக வழக்கில் உள்ளவைகள் தான மேலும் ஞானத்துக்கே உரிய வைகாசித்திங்களில் சிவனுக்கே உரிய* **திருவாதிரை** *மீனில் (நட்சத்திரம்) வளர்பிறையில் பிறந்த ஆண் குழந்தைக்கு மேற்படி ஆதிசிவன் ஆதிசங்கரன்.........என்கின்ற பெயர்கள் வைப்பதே மரபாகும். இதுவே பிறப்பியல் சாத்திறத்திலும், பெயரியல் சாத்திறத்திலும், உள்ள உண்மை.*

*இன்றுள்ள மலையாள மொழி தோன்றி சில 100 ஆண்டுகளே ஆகின்றது என்பதால், இந்த ஆதிசங்கரன் பிறந்த காலத்துச் சேரநாடு முழுவதும் தமிழ் மொழிப் பேசப்பட்டு அது தென்பாண்டித் தமிழகமாகத்தான் இருந்தது. எனவே ஆதிசங்கரர், ஒரு* **தமிழ் அந்தணர்** *குடும்பத்தில் பிறந்தவரே தமிழால் சிவன கோயிலில் பூசை செய்யும் குருக்களான* **தமிழ்ச் சிவாச்சாரியார்** *குடும்பத்தில் பிறந்தவரே ஆதிசங்கரர் மிகத் தெளிவாகச் சொன்ஞல் சீர்காழித் திருஞான சமபந்தர் தந்தையான சிவபாத இருதயரின் வழிவந்த சிவாச்சாரியான* **தமிழ் அந்தணர்** *சிவகுரு வின் மகனே ஆதிசங்கரர். ஆதிசங்கரர் தமிழ்ச் சைவ கருணீக்க வேளாளர் குல கொழுந்தாய் பிறந்தவரே [ஆதி சங்கரர் தோன்றிய அதே கருணீக்க சைவ வேளாளர் மரபில்: சிவபூசையில் தேறிய சிவச்சாரியார் குடும்பத்தில் தோன்றிய வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்கொடை வள்ளல், அருட்பா வழங்கிய பேரருளாளர் ஞானசித்தர் இராமலிங்க அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.] எனவே, கருணீக்க வேளாளர் மரபில் பிறந்த தமிழ் அந்தணர் சிவகுரு என்னும் சிவாச்சாரியாருக்கும், அவரது மனைவி ஆரியம் பாளுக்கும் [ஆரியம்மாள், ஆரியமர்லா, ஆரியமாலை, ஆரியாத்தாள்.........முதலிய பலபெயர்கள் ஏடுகளில் குறிக்கப்படுகின்றன, மேலும் இதுபோன்ற பெயர்களான ஆரியம்மாள், மாரியம்மாள், காளியம்மாள்.........தமிழர்கள் மட்டுமே வைக்கக் கூடியவை] வைகாசித் திங்களில் வளர்பிறையில் திருவாதிரை நட்சத்திரத்தில்* **காலடியில்** *பிறந்த ஆண் மகவே ''ஆதிசங்கரன்''*

*பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர்* **கி. பி. 785 இல் முதல் விசயாலயனை** *அரசுகட்டிலில் அமர்த்தி அருட் பேரரசுக்கு வித்திட்டு விட்டு உலகச் சுற்றுப்பயணம் சென்று திரும்பிய காலத்தில் தென்பாண்டி தமிழகத்தில் தோன்றியவர் எனவே தான், இவரைப் பற்றிய மிகத் தெளிவரனக் குறிப்புக்கள் இவர் எழுதிய குருபாரம்பரியத்தில் காணப்படுகின்றன.*

*சங்கரன் கி பி. 785 க்கு மேலே பிறந்தான் என்பதே ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குறிப்பு, அதாவது பதினெண் சித்தர்கள் இந்து மதத்தின் பெயரால் கன்னியாக்குமரி முதல் விந்திய மலைவரையுள்ள நிலப்பகுதி, இளமுறியா கண்டத்தின் மூன்ருவது அழிவுக்குப்பின் எஞ்சிய பகுதியாகும் இப்*

பகுதியோடு இணைந்து ஒரு முழுநிலம் உருவாக. கடலுக்குள் இருந்து வெளிப்பட்ட இமயமலையும்: அதன் மடியும், இணைந்தே இந்த இந்து மதத்திற்குரிய இந்தியா உருவாயிற்று. பழைய நிலமும், புதிய நிலமும் இணைந்தே உருவான பெருநிலப் பரப்புக்கு பதினெண் சித்தர்கள் தங்களின் இந்துமதத்துக்குரிய நிலமே இது என்ற பொருளில் **'இந்தியா'** என்று பெயரிட்டார்கள் ஏனெனில், கடவுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தின் தென்கோடி பகுதியிலிருந்த **'பன்மலையடுக்கம்'** என்கின்ற மலைத்தொடரில் பனிமுடிய உயர்ந்த பகுதிக்கு 'இமயம்' என்ற பெயரும், அங்கு பிறந்த ஆறுகளுக்கு 'பிறமண்' 'கங்கை' 'யமுனை'......... என்றிருந்த பெயர்களையே புதிதாகத் தோன்றிய இந்தியாவிலிருந்த பனிமுடிய பெரிய மலைக்கு **'இமயமலை'** எனவும் அதே ஆறுகளின் பெயர்களையும் சூட்டினாகள்.

ஆதிசங்கரர் இளமையிலேயே 'கருவில் திருவுடையராக' மந்திர சித்திகளைப் பெற்று ஞானசித்தரானார்: இவர் வாழ்ந்த காலம். உலகியலோடு தொடர்பு உடையது 32 ஆண்டு காலம். இறவாக்கையாக்கைக்கும் பிறவாமைச் சத்திக்குமாக பூசையில் அமர்ந்தது நான்கு ஆண்டுகள் ஆக மொத்தம் 36 ஆண்டுகள். தமிழில் பெரும்புலமை பெற்ற இவர் இந்தியாவில் இந்துமதக்தில் சமசுக்கிருதத்தின் பெயராலும், தமிழின் பெயராலும். பெரிய பிரிவினைகள் இருப்பதை முழுமையாக அகற்றுவதற்காகவே இவர் சமசுக்கிருதத்தில் மிகுந்த புலமை வளர்த்துக் கொண்டார். இவரே தமிழிலிருந்து பெரும்பாலான இந்துமத இலக்கியங்களின் சாரங்களை சமசுக்கிருத மொழியில் உருவாக்கினார். ஆனால் இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போயின பிருமணர்கள் இவர் சமசுககிருத மொழியில் தமிழிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்த இலக்கியங்களை வைத்துக் கொண்டே தமிழைத் தாழ்த்தவும், தமிழினத்தை வீழ்த்தவும் மெய்யான இந்து மதத்தைச் சீரழிக்கவும், பொய்யான ஹிந்து மதத்தை வளர்க்கவும் பிருமணர் தமிழர் என்ற பிரிவினையை அதிகமாக்கவும், இந்துமத சாத்திறச் சம்பிறதாயங்களை சாரமற்றவைகளாக ஆக்கவும், இந்து மத வரலாறுகளைக் குழப்பவும்........... செய்து வருகின்றனர்.

ஆதிசங்கரர் பதினெண் சித்தர் வகுத்த நெறிப்படி ஞானசித்தராகிறார் என்பதும்: இராமலிங்க அடிகளார் போல அருளுலக அனுபவங்களை வேதமாக எழுதினார் என்பதும், இராமலிங்க அடிகளார் போல் 'ஆதிசங்கரரும் உச்சிக் குடுமி' வைததிருக்கிறார் என்பதும் (ஆதாரம்: திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவிலில் உள்ள ஆதி சங்கரர் சிலையில் காணலாம்) வெள்ளாடை அணிந்திருந்தார். சிவபத்தராக விளங்கினார். பெண், பொன். மண் முதலியவைகளை மறுத்து வாழ்ந்தார். இராமலிங்க அடிகளார் மற்ற கோயில்கள் ஆலயங்கள் தமக்குப் பிடிக்காத நிலையில் உளளன என்றபோது தமக்கென வழிபாட்டு நிலையங்களை வடலூரில் அமைத்துக் கொண்டார். ஆனால் ஆதிசங்கரரோ தமது மந்திர சத்தியால் பல கோயில்களின் அருளூற்றுக்களை அடைத்துவிட்டார் (திருவொற்றியூர், திருவானைக்காவல்,.........) அருள் ஆற்றல்களைக் குறைத்து விட்டார். முப்பத்தாறு வயதிலே உடலையும், உயிரையும் நிலைப்பேறு செய்து சமாது ஆகிவிட்ட இளைஞரே ஆதிசங்கரர் என்பதால் இளமைக்கே உரிய வீராவேசத்துடன் எடுத்தேன், கவிழ்த்தேன் என்பது போல் எண்ணற்ற கோயில்களை பாழாக்கி விட்டார். அதாவது பிருமணர்களும், சமசுக்கிருத மொழியும் நுழைய முடியாதிருந்த பல கருவறைகளை அடக்கி ஒடுக்கி சிதைத்துச் சீரழித்து தமது மந்திரச் சித்திக்கு வெற்றிச் சின்னங்களாக்கி பிருமணர்களுக்கும், சமசுக்கிருத மொழிக்கும் இனமாகக் கொடுத்தார். எனவேதான் கருணீக்க வேளாளர் மரபில் தோன்றிய [கௌலீய மரபு கௌனிய கோத்திறம், தமிழ் அந்தணர், சைவ வேளாளர், சிவாச்சாரியார்.........ஒன்றே] சேரநாட்டு சிவாச்சாரியக்குலத்திருச் செல்வனை ஆதிசங்கரனை தங்களுடைய பிருமண இனத்தவனாக, வடஆரிய இனத்தவனாக, மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டிட்டார்கள்.

—தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்கவும்.

# இந்து மதம்-ஹிந்து மத விளக்கக் கட்டுரைத்தொடர்-3

இன்றைக்கு ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும், தொடர்ந்து முயற்சித்தும் கூட தமிழர்களே பொய்யான ஹிந்து மதத்துக்குப் பாதுகாப்புத்தருகிறார்கள். மெய்யான இந்துமதத்தை எதிர்க்கிறார்கள் இவற்றால் தான் மெய்யான இந்துமதம் பற்றியும், பொய்யான ஹிந்துமதம் பற்றியும், விளக்கியுரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மெய்யான இந்துமதப்படி பதினெண் சித்தர்கள் மண்ணின் ஈசர்களான மணீசர்களின் அக, புற நாகரீகங்களையும், வாழ்வியல்களையும், பண்பாடுகளையும், மேம்படுத்த வேண்டி தங்களுக்குள்ளே ஒருவரை ''பிறமன்'' ஆக தேர்ந்தெடுத்தார்கள். பதினெண் சித்தர்கள் அறுவை மருத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்றவர்கள் என்ற காரணத்தினாலே மற்ற மனிதர்களுக்கும், பிறமணுக்கும் வித்தியாசம் தெரிய வேண்டி பிறமணுக்கு அறுவை மருத்துவம் செய்து ஐந்து தலைகளைப் பொருத்தினார்கள் பினனர் ஈசனுக்கும் (ஈசனுக்கும் ஐந்து தலையை உடையவர்) பிறமணுக்கும் அடையாளம் தெரிய வேண்டி பிறமணின் ஐந்து தலைகளிலிருந்து, ஒரு தலையை அகற்றிவிட்டார்கள்.

ஆனால் பொய்யான ஹிந்து மதப்படி 'எங்கும் வியாபத்திருந்த பிரளய ஜலத்திலே எல்லாம் வல்ல இறைவன் சங்கல்பத்தால் ஒரு தாமரை தோன்றியதெனறும் அதிலே பிரம்ம தேவன் தோன்றினான் என்றும். அவனுக்கு நான்கு முகங்களும், நான்கு கரங்களும், உள்ளன என்றும், மேல் வலக்கரத்தில் ஜபமாலையும், மேல் இடக்கரத்தில் கமண்டலமும், பிரம்மனுடன் தோன்றின என்றும், கூறப்படுகிறது. மேலும், திருமாலின்நாபிக்கமலத்தில் தான் அந்தத் தாமரை மலர் தோன்றியது என்றும், அதாவது திருமால் தான் பிரம்மனைப் படைத்தார் என்றும் கூறப்படுகிறது.

b. உண்மையான இந்துமதப்படி அண்டங்களும், பேரண்டங்களும், அண்ட பேரண்டங்களும், இயற்கையாக தோன்றின இவைகளில் 108 திருப்பதி அண்டங்களிலும், 243 சத்தி அண்டங்களிலும் 1008 சிவாலய அண்டங்களிலும் தான் மனிதன் வாழ்கிறான்.

பொய்யான ஹிந்து மதப்படி பிரம்மன் தான் ஈரேழு உலகங்களையும் படைத்தான் என்றும்: பூலோகம, புவர்லோகம், சுவர் லோகம், ஆகிய மூன்று உலகங்களைத்தான் பிரமன் முதலில் படைத்தான் என்றும், அதனின்று தான் மகலோகம் ஜனலோகம், தப லோகம், சத்யலோகம், ஆகியவை உருவாகின, என்றும் கூறப்படுகிறது.

C உண்மையான இந்து மதத்தில் உயிரினங்களும், பயிரினங்களும், இயற்கை -யாகவே தோன்றின. உயிரினங்களில் அங்கவியல் சாத்திரப்படி [சாமுந்திரி காலட்சணம்) நான்கு மணீசர்களை பிறமண் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நேம, நியம, நிடத, நிட்டைகள், சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சை, நான்மறை, நான்முறை, நானெறிகள் நான் வேதங்கள், .........முதலியவைகளை அவர்களுக்குக் கற்பித்து அவர்களை மனிதர்களாக்கி தன்னுடைய ''படைப்புத் தொழிலுக்கு'' [அதாவது வாழ்வியல் இயக்கத் தேவையான கலைகள், அறிவியல்கள் விதிகள் படைத்தல்] உதவியாக வைத்துக் கொண்டார். அவர்களே, சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத் குமாரன் என்பவராவர்.

பொய்யான ஹிந்து மதப்படி புல், பூண்டு, செடி, கொடி, மரம், பட்சிகள், பிராமணிகள் என்று தொடங்கிய பிரம்ம சிருஷ்டையில் ஒன்பதாவதாக மனிதனை உருவாக்கினார் பிரம்மன்.

தொடரும்

காலப்போக்கில் ஞான சித்தனை ஆதிசங்கரனை பிருமண ஆச்சாரிய பீடமாக்கி பிருமண வேதத்துக்குரிய காவியுடை உடுத்திய மொட்டைத் துறவியாக ஓவியங்களிலும், சிற்பங்களிலும், இலக்கியங்களிலும் சித்தரித்துக் காட்டினர், எனவே, தமிழ் இலக்கியக் கருத்துக்களை சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்த்ததை அனைத்திலும் சமசுக்கிருத மொழியில் எழுதியவை, அனைத்திலும் சமசுக்கிருத இலக்கியத் தொடர்புடைவை என்று கூறப்பட்டு விட்டன.

மேலும் இவர்களின் அண்டப்புளுகு, ஆபாசப்பொய் காட்டு மிராண்டித்தனமான கற்பனை என்னவென்றால் சமசுக்கிருத மொழியையே தெரியாத வியாசரும், கண்ணதேவரும், வால்மீகிகளும், யக்ஞவல்கிகளும், சிவனும், முருகனும்...... சமசுக்கிருத மொழியில் தான் அனைத்தையும் கூறியுள்ளார்கள் என்று சித்தரித்துக் காட்டியிருப்பது தான், சமசுக்கிருதம் என்ற குழந்தை பிறந்து 2000 ஆண்டுகள் தானாகிறது ஆனால்இது 43,73040 ஆண்டுகளுக்குமுந்திய இந்து மதத்திற்கும், இந்து மத இலக்கியத்திற்கும்,அனைத்து வகையான பூரா விதிகளுக்கும்.... உரிமை பாராட்டுகிறது. இப்படி இந்த சமசுக்கிருதம் பழமையோடும், தமிழோடும் உறவாடுதற்குரிய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த ஆதி சங்கரனை எண்ணற்ற ஏமாற்றுகளின் மூலம் தங்களுடையவனாக்கிக் கொண்டிட்டார்கள். ஆதி சங்கரனைப்பற்றிய பல உண்மைகளும், இன்றைய காஞ்சி மடத்து வரலாறும் விரைவில் வெளிவரும். இவ்வுண்மைகளை அனைவரும் உணர்ந்து மக்களிடையே எடுத்துக் கூறுவதோடு ஆராய்ந்து பார்க்க வேண்டுகின்றோம்.

## கேள்வியும் நானே!............ பதிலும் நானே

கேள்வி: "-அகஸ்தியர் அநுபூதிப்படி சித்தம், மனம், புத்தி ஆகியவற்றை அடக்கி ஒடுக்கி ஆள்பவரே சித்தர் எனப்படுபவர். என்பது உண்மையா?

(தர்மச்சுடர் ஜூன் 1985 பக்கம்-39 சித்தர்கள் சித்தாந்தம் ஆசிரியர் பாலன் ஐயர்)

பதில்; இந்தக் கருத்து மிகப்பெரிய தவறான கருத்தாகும். பதினெண் சித்தர்களின் இந்துமதத்தையே தகர்ப்பதாகும்: அதாவது இந்து மதத்தை உயிராகவும், உடலாகவும், இயக்கச் சக்தியாகவும், தத்துவமாகவும், இருக்கின்ற சித்தர்களைப் பதினெண் சித்தர்களையும், அவர்கள் தோற்றுவித்த 48 சித்தர்களையும் குறிக்கும் இந்த இடத்தில் உள்ள சித்தர்கள் எனும் சொல் பற்றிய பேருண்மைகளை சிதைத்துச் சீரழித்து ஒழித்து கட்டும் முயற்சியே இது அதாவது, மெய்யான இந்துமதத்தை மூடிமறைத்து பொய்யான ஹிந்து மதத்தை வளர்க்கின்ற முயற்சியே இந்தக் கருத்து இது ஒரு மோசமான கருத்து. மோசடியான கருத்து இது முழுக்க முழுக்க தவறான கருத்து பிழையான கருத்து. முறைகேடான கருத்து. மெய்யான இந்து மதத்திற்கு எதிரான கருத்து தமிழினத்திற்குத் துரோகமான கருத்து. தமிழ்மொழிக்கு விரோதமான கருத்து

பதினெண் சித்தர்களின் அநுபூதிப்படி சித்தர்கள் என்பவர்கள் சிந்தை(சித்தம்), நெஞ்சம்(மனம்), உணர்வு(புத்தி), செயல்(சித்தாந்தம்)......... முதலிய அனைத்தையும் அவற்றின் நோக்கப்படி வேகமாகவும், விரிவாகவும் செயல்பட்டு களைத்துச் சோர்ந்து, அயர்ந்து துய்ப்பால் உண்மையை உய்த்துணர்ந்து தாமாகவே அடங்கிட வேண்டும். அப்படி அனைத்தும் தாமாகவே அடங்கப் பெற்றவர்கள்தான் சித்தர்கள் (அ) சித்தர் நிலை பெற்றவர்கள், மெய்யான இந்துமதத்துவம் ஆகும் இப்பேருண்மையினை இன்றுள்ள பொய்யான இந்துமதத்தின் தலைவர்களாக விளங்குகின்ற பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள், மறைத்தும், குறைத்தும், திரித்தும் செயல்படுகிறார்கள். இவற்றை எதிர்த்துப் போராடுவதே மெய்யான இந்துமதத்தைப் பரப்புவதும், போற்றுவதும், பாதுகாப்பதுமாகும். எனவேதான் சித்தர்கள் வேதமத எதிர்ப்பாளர்களாக வாழவேண்டியிருக்கிறது.

'இந்து மதமும், பொய்யான ஹிந்து மதமும்' வரிசையில்.......... !

# ஆதிசங்கராச்சாரியாரும் சங்கராச்சாரியாரும்

பிறமண்ணினரான பிருமணர்கள் ஆதிசங்கராச்சாரியார் என்பவரும், சங்கராச்சாரியார் என்பவரும் ஒருவரே என்று கூறிவருகின்றனர். அதாவது, ஆதி சங்கராச்சாரியார் என்பவர் [காலடி ஆதி சங்கரன்] முதலாவது நபர் என்றும்; அவரின் அடியொற்றி வந்தவர்கள் சங்கராச்சாரியார் என்றும் கூறி மிகப் பெரியக் குழப்பத்தை உண்டு பண்ணுகின்றனர். ஆனால் இதைப்பற்றி மிகத் தெளிவாகப் பதினெண் சித்தர்கள் கூறும் கருத்தென்ன வென்பதை ஆராய்வோம்.

ஆதி சங்கரர் என்பவர் வேறு; சங்கரர் என்பவர் வேறு, ஆதி சங்கரர் என்பவர்கள் ஒரு பிரிவினராகவும், சங்கரர் என்பவர்கள் மற்றொரு பிரிவினராகவும் தொடர்ந்து இந்து மதத்தில் வருகின்றனர். பதின்மூன்று வகை கருவழி ஆச்சாரியார்களும் [அத்திரி, இத்திரி, தோத்திரி.........], 13 வகை குருவழி ஆச்சாரியார்களும் [பத்தர், பத்தியார்,............] தோன்றிச் செயல்படுகின்றனர் இதுவன்றி, இந்துமத கட்டுக்கோப்புக்கும், ஒழுங்கமைப்புக்கும், பதினெண் சித்தர் பீடாதிபதி காலத்து 48 வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்களை (தெய்வீகாச்சாரியார், கடவுளாச்சாரியார்..........) கலைகளைப் பயிற்றுவைப்பதற்காகத் தோற்றுவிக்கப்படுகின்றனர். இவையன்றி எட்டு வகை ஆச்சாரியார்கள் தோன்றி இந்து மத வளர்ச்சிக்கு நாடெங்கும் சுற்றிப் பாடுபடுபவர்கள் சங்கராச்சாரியார், ஆதி சங்கராச்சாரியார், பரமாச்சாரியார், ஈசுவராச்சாரியார் சிவாச்சாரியார், ஆதிசங்கராச்சாரியார், ஆதிசிவாச்சாரியார், ஆதி பரமாச்சாரியார், ஆதி ஈசுவராச்சாரியார், என எண்மர் ஆவார்கள். இவர்களில் சிறப்பாக ஆதி சங்கராச்சாரியாரும் சங்கராச்சாரியாரும் ஆகஇருவருமே இங்கு காணஉள்ளோம்

பதினெண் சித்தர்களின் குறிப்புப்படி, இதுவரை 40 சங்கராச்சாரியார்களும் 32 ஆதிசங்கராச்சாரியார்களும் தோன்றியுள்ளனர் என்பதே உண்மை ஆக இவர்கள் எழுபத்திரண்டு பேரும் தமிழுணர்ந்த தமிழர்களே! தமிழினத்தில் மட்டும் தான் இவர்கள் தோன்ற முடியும். பதினெண் சித்தர்களின் கணக்குப்படி இன்னும் பதினாறு ஆதிசங்கராச்சாரியார்களும் 8 சங்கராச்சாரியார்களும் தோன்ற வேண்டும், தோன்றுவர்.

இனி சங்கரருக்கும், ஆதி சங்கரருக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்போம்.

'சங்கரன்' என்றாலே சிவன்; சிவனை வழிபடுபவர்கள், என்றே பொருள். சங்கராச்சாரியார்கள் அனைவருமே, '' தானே சிவம் சிவமே தான், 'எனக்குள் கடவுள் கடவுளுக்குள் நான்'' என்றும்' 'தானே பிறம்மம்: பிறம்மத்துள் தான் என்னும் அத்வைத கொள்கையுடையவர்கள். உருவவழிபாட்டை முழுவதுமாக வெறுத்து எதிர்த்தவர்கள், இவர்கள் நாடெங்கும் சென்றாலும்: தனிமடத்தையே அமைப்பையோ உருவாக்குவதில்லை, கடவுள்களை, சிறு பெரு தெய்வங்களை தமது மந்திர சத்தியால் கட்டுவதில்லை. பொதுவாக வெள்ளாடையையே [ஞானத்திற்குரியது] உபயோகிப்பர்

ஆதிசங்கராச்சாரியார்கள் உருவவழிபாட்டை ஆதரிப்பதோடு, அனைத்துக் கோயில்களுக்கும் சென்று வழிபடுபவர் சிவனை வழிபடுவதோடு சத்தியையும் இணைத்தே சத்தி சிவ [அம்மையப்பன்] வழிபாடு செய்வர் இவர்கள் சித்தாந்தவாதிகள், மண் பெண் பொன் இவற்றை அளவோடு பயன்படுத்தி மாந்தரீக, தாந்தரீக, எந்தரீக பூசை செய்பவர்கள் இவர்கள். நாடெங்கும் தங்களுக்கென மடங்களை உருவாக்கி, குருவழி வாரிசுகளைச் செயல்படுவார்கள் இவர்கள் தங்களுடைய வலிமைக்காக சிறு பெரு தெய்வங்களை தனது மந்திரசத்தியால் கட்டுவர் இவர்கள் உச்சிக்குடுமியோடு வெள்ளாடையையே பயன்படுத்துவர்.

ஆனால், இன்றைய காஞ்சி மடத்து சங்கராச்சாரியார் முதல் அனைவரும் காலடி ஆதி 'சங்கரன் தோன்றல்' எனக் கூறி 'அத்வைதத்தைப்' போதித்துக் கொண்டே அனைத்துக் கோயில்களுக்கும் சென்றுவருகின்றனர்.

# சித்தர் இராமாயணம் ஏன்?........... எதற்கு இப்போது?

இன்றைக்கு நாட்டு நடப்பில் இராமன் பெயரைச் சொல்லாதவர்களே இல்லை இராமாயணக் கதையை மேலோட்டமாகத் தெரியாதவர்களே இல்லை.

இராம வரலாற்றைப் பற்றிய கதைகள், காதைகள், கவிதைகள் (காப்பியங்கள்) கீதைகள், பாட்டுக்கள், நாட்டியங்கள், கூத்துக்கள், நாடகங்கள், கிராமியக்கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், விரிவுரைகள், திரைப்படங்கள், கோயில் திருவிழாக்கள், இராமன் பிறப்பு, சீதை மீட்பு, இராமன் முடி சூடல்.........முதலிய திருநாள்கள் நாட்டுநடப்பில் எண்ணற்றுத் தோன்றிக் கொண்டே உள்ளன.

இராமன் வரலாறு கிழக்கே சயாம் எல்லையும், மேற்கே மெக்சிக்கோ எல்லையும் கொண்டு உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. இந்திய மொழிகளில் புகழ்வாய்ந்த இலக்கியங்களில் இராம வரலாற்றுக்காகக் கம்பர், கிருத்திவாசு, துளசிதாசர், வால்மீகி, ஆதிவால்மீகி, ஆதிக்கம்பர்..........முதலியோர் படைத்தனர். இவைகள் ஆங்கிலம், சீனம், பிரெஞ்சு.........முதலிய ஆசிய ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

பௌத்த மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இராவணன் வரலாறு இலங்காவதாரச் சூத்திரம் என்றும்; இராமன் வரலாறு 'பௌத்த இராமாயணங்கள்' என்றும் எழுதப்பட்டுள்ளன.

இராம வரலாற்றை [illegible] மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சமசுகிருத மொழியில் [illegible] சரிதம்' என்ற நூலை விசயகனி [1596 கி. பி.] என்பவர் எழுதினர்: '[illegible]ம்' என்ற நூலை இரவிசேனர் [678 கி. பி] என்பவர் எழுதினர்; இவற்றை விடச் சிறப்பாக விமலசூரி என்பவர் [கி. பி 300], 'பரம சரிதம்' என்ற நூலைப் 'பிராகிருத மொழியில்' எழுதினர். யாரோ, காலப்போக்கில் பிராகிருத மொழி [*இது பிற + கிருத + மொழி —> பிருகிருத மொழி = தமிழுக்குச் சமமாகச் செய்யப்பட்ட சம + கிருதம் சமசுக்கிருதம் என்பது போல்; சமசுகிருதத்துக்குப் பிறகு. தமிழிலிருந்து செய்யப்பட்ட = கிருதம் செய்யப்பட்ட மொழியே பிருகிருத மொழி ) ~~சமசுகிருதமொழி~~ கன்னட மொழி ஆகிய மூன்று மொழிகளில் இராமவரலாற்றை இலக்கியமாகப் படைத்தவர்கள் மட்டும் 1. இரவிசேனரியன், 2. ஏமசந்திராச்சாரியார், 3. கவி பரமேசுட்டி, 4. குணபத்திரர் 5, கூசி பட்டாரகன், 6 சகலகீர்த்தி 7. சித்தசேனன் 8 பதும நந்தீசன் 9. நந்தி முனிவரன், 10. வீரசேனன் எனும் பதின்பர்.

*சித்தர் இராமாயணத்தைத் தத்தமது ஆற்றலுக்கேற்ப எழுதிப்புகழ் பெற்றனர் .........' என்று கருவூரர் வழி வந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனபட டியார் இராமசாமி பிள்ளை குறிக்கருர்*

கடந்த நூற்றாண்டில் [19] 'பானுபட்' என்பவரும் இதற்கு முந்திய நூற்றாண்டில் [18] 'திவாகர்-பிரகாசுபட்' என்பவரும் 'நேபாள மொழியில்' இராம வரலாற்றை 'அத்தியாத்ம ராமாயணம்' என்ற பெயரிலும்; 'இராமாவதார சரித்திரம்' என்ற பெயரிலும் எழுதிய இராம வரலாறுகள் குறிப்பிடத்தக்கவை.

'உருது மொழியில்' இராமவரலாற்றை 'முன்சிசகன் லாதக்குசுட்டார்' [19-ம் நூற்] என்பவரும்; 'அசுசாமிய மொழியில்' இராமவரலாற்றை 'கவி மாதவ கங்குனி' என்பவரும் [14-ம் நூற்]; 'வங்காள மொழியில்' இராம வரலாற்றை 'ஸ்ரீ ராம பாஞ்சாலி' என்ற பெயரில் 'கிருத்திவாச ஓசா' [15-ம்நூற்] என்பவரும்: 'ஒரியா மொழியில்' இராம வரலாற்றைப் 'பலராம் தாசு' [16-ம்நூற்] என்பவரும்; 'குசராத்தி மொழியில்' இராம வரலாற்றை 'ஆசாசிட்ட மல்லன்'

'துர்க்காதாசு' 'அரிதாசு' என்பவர்களும்; 'மாராட்டிய மொழியில்' இராம வரலாற்றை 1. ஸ்ரீதர் 2. ஏகநாத் [ஏகநாத் இராமாயணம் (அ) பாவார்த்தராமாயணம் 3- பந்த்து 4. கவி முத்தேசுவர 5, மோரோ 6. கிருட்டிணதாசுமுதுகலின் 7. சமர்த்த இராமதாசு (இலகு இராமாயணம் - இல்வகுச இராமாயணம்) (......என்று பலரும் 17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்] என்பவர்களும, கன்னட -மொழியில் இராம வரலாற்றை 1. நரகரி (தொர்வே இராமாயணம்) 2 பம்பன் -(பம்ப இராமாயணம்) என்பவர்களும் (கன்னட மொழியில் பெயர் தெரியாத ஆசிரியர்களால், நாடோடிப் பாடலாக, பழமொழியாக, விடுகதையாக, தாலாட் -டாக......, 'இராம கதாவதாரய' 'குமுதேந்து இராமாயணம்' 'சைண அல்லது சமண ராமாயணம்' 'இராம விசய சரிதம்'.........என்று பல இராமவரலாறுகள 16-ம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வளர்த்திட்டன] 'மலேயாள மொழியில்' இராம வரலாற்றை எழுத்தச்சன்' (14-ம நூற்) என்பவரும் (அத்தியாத்தும இராமாயணம், இராமசரிதம்) 'தெலுங்கு மொழியில்' இராமவரலாற்றை மக்களின் அன்றாட இசைப்பாடலாக, தாலாட்டாக, முதுரையாக...........உரு வாக்கிய 'மொல்லா' (மொல்ல ராமாயணம்). 'கொச்சி மன்சு தில்மர்' 'அரங்க நாதர்' (திவி பாத ராமாயணம), 'திக்கண்ணா' ([illegible] சோதர் ராமாயணம்') 'பாசுக்கரர்' (பாசுக்கர- ராமாயணம்).........எ[illegible]ம் 'இந்தி மொழியில் இராம வரலாற்றைத் 'துளசிதாசர்' [1573-இல் 'இராம சரித மானசு'] என் பவரும்; 'தமிழ் மொழியில்' இராம வரலாற்றைக் '[illegible]சர் கம்பர்' என்பவரும [8-ம் நூற்]: 'சமசுக்கிருதத்தில்' இராமவரலாற்றை கவி வால்மீகி என்பவரும் [இவரால் பிறந்த ராமாயணத்தை ஒட்டியே 1. '[illegible]தும இராமாயணம்', 2. 'ஆனந்த இராமாயணம்', 3. 'சேசராமாயணம்', 4 'சம்பூர்ண இராமாயணம்', 5. 'அற்புத இராமாயணம்', 6. 'யோக வசிசிட்ட இராமாயணம்', 7. 'பிறம்மானந்த இராமாயணம்'.........போன்றவை தோன்றின].........காப்பியங்கள் இயற்றியுள்ள -னர். இப்படி எண்ணற்றோர் பல மொழிகளில் இராமாயணம் எழுதக் காரண மென்ன என்ற வினவுக்குப் பதிலே சித்தர் இராமாயணம்-

---

**மெய்யான இந்து மதமும் பொய்யான ஹிந்து மதமும் வரிசையில்............!**

## காலடி ஆதி சங்கரன் ஒரு தமிழனே!

ஆதிசங்கராச்சாரியார் என்பவர்கள் பதினெண் சித்தர்களின் நெறிப்படி சத்தி வழிபாடு' 'கன்னிப்பூசை' 'தாய்வழிபாடு'............முதலிய பூசைகளைச் செய்பவர் -களேயாவார்கள். இவர்களில் ஞான சித்தர்களும் தோன்றுவதுண்டு. இப்படித் தோன்றும் 'ஞானசித்தர்கள்' உலகியலுக்காகவாவது பெயரளவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதாவது இல்லறத்தை ஏற்றவர்களாக இருக்க வேண்டும். அல்லது 'கூடுவிட்டு கூடு' பாய்ந்து வேறு உடல்களிலிருந்து பெண்ணின்பத்தைத் துய்த்து பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குரிய இல்லற வாழ்வை ஏற்றவர்களாக ஆகவேண்டும். மேற்படி நெறிப்படி தோன்றி செயல் பட்ட 'காலடி ஆதி சங்கரன்' தென்பாண்டித் தமிழனே.

ஆதி சங்கரர் தானே எழுதிய சௌந்தர்யலகரியில் தம்மை ஒரு தமிழன் என்று குறிக்கின்றார். (இலகரி-இலாகிரி—மயக்கும் பொருள்)

சௌந்தர்ய லகரியில் 75-வது சூத்திரத்தில் ......... ''தவஸ்தன்யமன்யே'' என்று தொடங்கி ''திராவிடசிசு ராஸ்வாத்ய தவயத் கவீனல்ப் ரௌடானு மஜனி கமனீயா கவயிதா' என்று முடிகிறது.

இச்சூத்திரத்திலிருந்து நாம் உணர வேண்டிய கருத்தாவது ''மலைமகளே, உன்னுடைய பால் ஹ்ருதயத்திலிருந்து உதிர்த்த அமிர்த பிரவாகமோ! சரசுவதியே, பாலாகப் பெருகி வருகிறாளோ! கருணையுடன் நீ கொடுத்த பாலைப்பருகிய திராவிடக் குழந்தை சிறந்த கவிஞர்களுக்குள் உயர்ந்த கவியாக ஆனான்...'...என்பதேயாகும்.

இதனுடைய உரைநூல் ஒன்று 'திராவிட சிசு' என்பதை காலடி ஆதிசங்கரரையே குறிக்கின்றது என்று கூறுகின்றது மற்றபடி பலஉரைகள் அச்சொல், கருணீக்க வேளாளர் குலத்துத் தோன்றிய ஆதிசங்கரரையும், திருஞான சம்பந்தரையும் இராமலிங்க அடிகளாரையும் குறிக்கும் என்கின்றன.

காலடி ஆதி சங்கரர் தாந்தரீக சித்தியாளனாகவும் மாந்தரீக வல்லியாகவும் விளங்கியதால் தம்மை ஆதரித்த போற்றிய பிருமணர்களும், சமசுகிருத மொழியும் கருவறைக்குள் -கோயில்களுக்குள் நுழைய வேண்டும் என்பதற்காக பல கோயில் தெய்வங்களை கட்டி அடக்கினார். அதனால் பிருமணர்கள் அவரைப் போற்றி மகிழ்ந்து தங்களின் தலைவனாக ஏற்றனர். இன்று அவரைப் பிருமணராகக் கூறிவருகின்றனர். இதனைக்கண்டிப்பதற்காகத் தான் சத்திவழிபாட்டின் சாரமாக சமசுக்கிருத மொழியில் தாம் எழுதிய சௌந்தர்யலகரியில் 75-வது சூத்திரத்தில் சமசுக்கிருத மொழிக்கே உரிய 'திராவிடசிசு' என்ற சொல்லால் தன்னை ஒரு தமிழன் என்று குறித்து வெளிப் படுத்துகின்றார் இதனைவிட பெரிய சான்று என்று வேறு ஒன்று வேண்டும்?

---

## சின்னச் சின்னச் செய்திகள்!

▽ காலடி ஆதிசங்கரர் காசியிலிருந்தபோது கருரிலிருந்து காக்கையரின் வேளாளர்குடியைச் சேர்ந்த **சந்தானம்** என்பவர் தேடிவந்து அடியானாக மாறினார்.

▽ சந்தானத்தின் ஆழமான தமிழ்ப்புலமையையும், விரிவான இந்து மத இலக்கிய அறிவையும் உணர்ந்து போற்றி அவரை தலைமை மாணாக்கராக ஏற்றார் ஆதி சங்கரர். சமசுக்கிருத மொழிக்கு ஏற்ப அவரின் பெயரை **சனந்தா** (சுனந்தா) என்றழைத்தார் மற்றவர்கள் **சனந்தர்** என்றே அழைத்தனர்.

▽ கங்கையின் ஒருகரையில் சனந்தர் இருந்தபோது, குருவான ஆதி சங்கரர் மறுகரையில் இருந்து அழைத்தபோது, வெள்ளப்பெருக்கின் மீது தனது தவ வலிமைப் பயிற்சியால் நடந்து வந்தபோது இவரின் திருப்பாதங்கள் தண்ணீரில் மூழ்கிடாமல் திடீர்திடீரென்று தோன்றிய அருட் -தாமரை மலர்களால் தாங்கப்பட்டன. இது கண்டு வியந்த ஆதிசங்கரர் இவரை அருட்தாமரைப் பாதர், என்று அழைத்தார். இப்பெயரும் சமசுக்கிருத மொழிகேற்ப 'பத்ம பாதர்' எனப்பட்டது.

▽ ஆந்திர கர்நூல் மாவட்டத்திலுள்ள **ஸ்ரீசைலம்** கோவிலில் தங்கி ஆழ்ந்த தவத்தில் ஆழ்ந்து ஸ்ரீசிவானந்தலாகிரி என்ற நூலை எழுதிக் கொண்டிருக்கும் போது அவரைப்பலியிட்டு சித்திகள் பெற அவரிடமே அனுமதி பெற்ற **உக்கிரபைரவன்** என்பவன் அவரைக் கொலை செய்ய வாளை ஓங்கினான். உடனே முதல் மாணாக்கனும், மெய்க்காவலனுமாகிய சந்தானம் அவனுடன் போரிட்டு கொன்று ஆதிசங்கரரைக் காப்பாற்றினார்.

# வணக்கவுரை

## பிரமார்ச்சாரியார்

இன்றைய இந்து மத நடைமுறைகளும், பழக்கவழக்கங்களும், சம்பிரதாயங்களும், பூசா விதிகளும். புராண இதிகாச வரலாறுகளும்......... கேலிக்கும் கிண்டலுக்கும் ஆராய்ச்சிக்கும் உரியனவாக இருக்கின்றன. எனவேதான், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தன்னிடையேக் குவிந்துள்ளக் குறிப்புகளையும், செய்திகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும், தெளிவாகி எழுதியும், பேசியும் வருகின்றார்கள் இவர் கூறும் இந்து மதக் கருத்துக்களைப் பற்றி அனைவரும் அறிந்து ஆராய்ந்துணர வேண்டுகின்றோம்.

பிறமண்ணினரான பிருமணர்கள் கூறும் கட்டுக்கதை ஆபாசக் கதைகளின் வடிவாக உள்ள புராணங்களையும் இதிகாசங்களையும்..............படித்து விட்டு நாம் கூறும் வரலாறுகள் செய்திகள், குறிப்புக்கள்.........என்னவென்றேப் படித்துப் பாராமல்; மறுப்பும் வெறுப்பும், எதிர்ப்பும் தெரிவிக்கின்றனர் மக்கள் அனைவரும்.

பிருமணர்களின் சடங்குகளில் மூழ்கிப் போன நமது மக்கள்: நாம் கூறும் முற்போக்கான பழக்க வழக்கங்களை ஏற்க முடியாமல் திணறுகின்றனர். இது ஆத்திகரிடையே ஏற்பட்ட தோல்வி பகுத்தறிவாளர்களோ நம்முடைய தெளிவான 'பிருமண எதிர்ப்புக் கொள்கையை' ஏற்று சீரணிக்க முடியாமல் திணறுகின்றனர். ஏனெனில் நாம் தெளிவாகவும் சீராகவும் முறையான சான்றோடும்' இந்துமதம் சாகா விஞ்ஞானம் அனுபவப்பூர்வமானது அது தமிழனின் சொத்து அருளாளர்கள் அனைவரும் தமிழர்களே என்று சான்று காட்டி: பிருமணர்கள் நிகழ்த்தி வரும் ஏமாற்றுப் போக்குகளையும் அடிப்படைகளையும் தகர்த்து வருகின்றோம் இவ்வுண்மையை ஏற்று பகுத்தறிவாளர்கள் ஆதரவு தராததால் அவர்களிடையே தோல்வி.

பதினெண் சித்தர்கள் வகுத்த "இந்துமதம்" முழுமையான "சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமைத் தத்துவமாகும்" இதனை நாடெங்கும் பரப்பிச் செயல்படவே. நாயன்மார்களும் ஆழ்வார்களும், அருளாளர்களும்: வள்ளலார்களும் தோன்றிச் செயல்பட்டனர் இன்றும் அத் தத்துவத்தை இ. ம. இயக்கம் அருளுலகில் தன்னுடைய எல்லைகளுக்குட்பட்டு நிகழ்த்தி வருகின்றது இந்த உண்மையை முழுவதுமாக உணர முடியாததால் தனது உடமைகளிடையே தோல்வி

நமது அனைத்து விதமான முயற்சிகளும் மக்களிடையே விரைந்து சென்று பரவவில்லை நம்முடையத் தத்துவம் மனித குல முன்னேற்றத்திற்கும், ஒருமைப் பாட்டிற்கும் பாடுபடக் கூடிய ஒன்று '**சமயசமுதாய அரசியல்**' மறுமலர்ச்சியே நமது நோக்கம் பண்பாட்டுப் புரட்சியே நமது குறிக்கோள்' என்ற உண்மை நமது மக்களிடையே பரவவிடாமல் தடுத்து வரும் **செய்தியேடு உலகத்திடையே** தோல்வி: நம்மை ஆதரிக்க விரும்பாத சமுதாயவாதிகளிடையே தோல்வி.

இப்படி, சமய. சமுதாய, அரசியல் வாதிகள் முழுமையாக நம்மை ஆதரிக்கத் தயங்குவதால் ஏற்கத் தயங்குவதால் நமக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளைப் பற்றி மிகவும் ஆழமாகவும். நெடு நோக்கோடும் சிந்தித்துப் பார்க்கிற அனைவரையும் அழைக்கின்றேன். இதற்காகவே பல **சிறப்பு மலர்கள்** பலரின **வாழ்க்கைக் குறிப்புகள்** வெளிவருகின்றோம் இவற்றை உணர்ந்து மதுரையில் வரும் தை மாதத்தில் நடைபெற உள்ள மாநில மாநாட்டிற்கு வரலாற்று முக்கியத்துவத்தை ஏற்படுத்த வேண்டுகிறேன்

**சி. கவிக்குமார்**

தொடர்பு:- தலைமை பொறுப்பாளர், சி. கவிக்குமார் BSc.
56, N.G.O. காலனி, பொன்னேரி-601 204

K V S பிரிண்டர்ஸ் தேரடி தெரு பொன்னேரி

# சின்னச் சின்னச் செய்திகள்!

▽ பூரியிலுள்ள (ஒரிசா)கோவர்த்தன மடமான 'விமலா பீடத்தை'தனதுமுத்த மாணவனை சனந்தரிடம் ஒப்படைத்தார் ஆதிசங்கரர். மெய்யான இந்துமதக் கருத்துக்களை சமசுக்கிருதத்தில் ஆதிசங்கரர் மொழி மாற்றம் செய்வதற்குப் பேருதவியாய் இருந்த சனந்தரிடம் ஒப்படைத்ததால், அம்மட செயல்பாடுகள் யாவும் தமிழகத்தின் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டே பூசைகள் நிகழ்ந்தன. இன்றும் அவ்வாறே விளங்கக் காணலாம். மெய்யான இந்து மடமாக உள்ளது பூரிமடம்.

▽ ஆதிசங்கரர் 'சௌந்தர்யலகிரி' மற்றும் 'ஸ்ரீ சிவானந்த லகிரி' என்னும் நூலை எழுதினார். இவ்விரண்டும் பதினெண் சித்தர்களின் இந்துமதச்சாரமே ஆகும்.' சௌந்தர்யம்' என்றால் அழகு என்றாகும். இலாகரி என்றால் மயக்கப் பொருளைக் குறிக்கக் கூடியது. 'மனம் இலகுவாதல்' என்றால் சுமையற்று இருத்தல், கவலைகள் மறத்தல், மயங்கித் தூங்குதல் என்பது பொருளாகும். 'இலகு' என்பதே வேர்ச்சொல் (Root Word) 'இலகு' என்னும் அடிப்படைச் சொல்லைக் கொண்டு பிறந்ததே இலாகிரி என்னும் சொல்லாகும். எனவே 'சௌந்தர்ய இலாகிரி' என்னும் ஆதிசங்கரர் குறிப்பிட்ட சொல் அழகிய தமிழ்ச் சொல்லே!

▽ காசுமீர குருவழி ஆச்சாரியார் மண்டன மிச்சரு'டனும் அவரது மனைவியான சரசவாணியுடனும் வாதிட்டவர் ஆதிசங்கராச்சாரியார் அல்ல; சிவபத்தியில் சிறந்த சங்கராச்சாரியாரே' என்ற குறிப்பும் இல்லையில்லை. சரசவாணியுடன் வாதிட்டது ஆதிசங்கராச்சாரியாரே யாவார்! என்ற குறிப்பும் ஆக இரு வேறு குறிப்புகள் உள்ளன.

▽ சரசவாணியோடு வாதிட்டபோது இல்லறம் என்னும் அகத்துறையின் மோகம், ஈகம் (மணம்), போகம், தாகம் என்னும் நான்கினுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

▽ இல்லற இன்பம் காண, திடீரென்று மாண்ட காசி மன்னன் அமருகனின் உடலில் கூடு விட்டு கூடு பாய்ந்து 48 நாட்களுக்குமேல் அரசியுடனும், மற்றையோருடனும் இன்பம் துய்த்து அரண்மனையில் இருந்தார் ஆதிசங்கரர் (விரிவான வரலாறுபின்னர்வரும்) ஈக,போக, தாகங்களை அனுபவித்தார் ஆதிசங்கரர்.

▽ ஆதிசங்கரரின் உடலை தீவைத்து கொளுத்த முயன்றபோது மீண்டும் தன் உடலில் புகுந்து தீப்புண்களுடன் உயிர்தப்பினார். இடுப்புக்குமேல்பகுதிகள் தீக்காயங்களுக்கு உள்ளாகின. பின்னர் அவர்தனது தவறுணர்ந்து இமயமலை நோக்கி இறுதி சித்திப் பயணம் மேற்கொண்டார்.

▽ சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்ரிநாத் ஆக நான்கு மடங்களும், காலடி ஆதிசங்கராச்சாரியாரால் துவக்கப்படவில்லை. (வரலாறு பின்னர் வரும்)

● உலககுரு, சகடகுரு, (லோககுரு சகத்குரு) என்ற தமிழ்ச் சொல்லின் உண்மைப் பொருளை உணர்ந்து ஏற்றவர் ஆதிசங்கரர். அதாவது பெண்ணின்-பத்தை துய்த்தவர்களே இக்குரு நிலையில் நின்று செயல்படலாம். ஆனால் துறவறத்தை மேற்கொண்டுள்ள இன்றைய சங்கராச்சாரியார்கள் லோககுரு, ஜகத்குரு என்று வைத்துக்கொண்டுள்ளது சிரிப்புக்கிடமாகும்.

● சரசவாணி இல்லறம் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு 'பெண்ணின்பம் துய்த்த பின்னரே ஆதிசங்கரர் பதில் அளித்ததால் அவருக்கு 'சரசுவதி' என்றும 'சர்வக்ஞர்' என்றும் பட்டங்கள் வழங்கினார். இதை உணராமல் தாங்களும் (இன்றைய சங்கராச்சாரியார்களும்) இப்பட்டங்களை வைத்துக் கொண்டிருப்பது கேலிக்குரியது என்பது சங்கர மடத்தாருக்குத் தெரியாதோ?

● இராமநாதபுர மாவட்டத்தில் தாயுமானவா சாமிகள் தவநிலையில் ஆழ்ந்-திருந்தபோது அவருக்கு இட்ட நெருப்பு அவரின் காலைச்சுட்டு கருக்கியது. பின்னர் தமிழ் மந்திரத்தால் நலமடைந்தார். இவரைப் போலவே (தமிழ் மந்திரத்தால்) ஞானசித்தரான ஆதிசங்கரர் கூடு விட்டு கூடு பாய்ந்து பெண்ணின்பம துய்த்தபோது தமது தமிழ் மந்திர வலிமையை உலகுக்கு எடுத்துக் காட்டவே உடலின் மேற்பகுதி தீச் சுட்டுக் கரியாக்கும வரை அமைதியாக இருந்தார். பின்னர் தன்னுடலில் புகுந்து, சுட்டப் புண்களை தமிழ் மந்திரம் கூறி நலமாக்கிக் கொண்டு இமயமலைப் போந்தார்.

# குருதேவரின் 'வணக்கவுரை'

தனிமனித வரலாறு ஒரே அறிக்கையில் கூடுமானவரை முழுமையாக வெளியிடப்படல்வேண்டுமென்ற முயற்சியே இந்த 'ஆதிசங்கராச்சாரியார் சிறப்பு மலர்' பெரிய பதிப்பகங்கள் முன்வந்தால், அருளுலக இருள்களையும், இன்னல்களையும், இடர்களையும், இருட்டடிப்புக்களையும், தவறுகளையும், குறைகளையும், கறைகளையும்........அகற்றி உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் முயற்சி வெற்றி பெறும். அதாவது, மாற்று மதங்களைக் கடுமையாக விமர்சித்தோ! அல்லது தமது மதங்களை விரிவாக்க முயன்றோதான் மதப்பூசல்கள், சண்டை சச்சரவுகள், போர்கள் நிகழுகின்றன. இவற்றை தடுக்க, அகற்ற........அனைத்து மதத்தோற்றம், வளர்ச்சி, முயற்சி, ........ முதலியவை பற்றிய வரலாறுகளை வெளியிடுவதுதான்.

'எத்தனை வகை ஆச்சாரியார்கள்?' அல்லது 'சங்கராச்சாரியார்களும் ஆதி சங்கராச்சாரியார்களும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளவரலாற்றுச்செய்திகளைத் தனி நூலாக வெளியிட வாய்ப்பில்லை, வசதியில்லை......!யார் முன்வந்தாலும் இந்நூல் வெளியீட்டை ஒப்படைக்க விரும்புகிறோம்.

நாற்பத்தேழு தேவகுமாரர்கள் [இயேசு—> ஏசா—> ஈசா] நாற்பத்தெட்டுத் தேவதூதர்கள் [நபிகள்] முப்பத்திரண்டு புத்தர்கள் [கௌதமபுத்தர்] இருபத்தேழு தீர்த்தங்கரர்கள் [மகா வீரர்கள்] எட்டுவகை ஆச்சாரியார்கள், கருவழி ஆச்சாரியார் பதின் மூன்றுபேர், பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள் நாற்பத்தெட்டுப்பேர்.........முதலியோர் வரலாறு, சாதனை, போதனை.......முதலியவைகள் தனித்தனி நூல்களாக வெளிவர வேண்டும். அப்பொழுது தான், 'கருத்துப்புரட்சி', 'எண்ணப்புரட்சி', 'சிந்தனைப்புரட்சி'... முதலியவைகள் விளைந்து 'பண்பாட்டுப்புரட்சி' என்கின்ற அறுவடையைத்தரும்; அந்த அறுவடை தான், 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கும்;' என்பதே இந்துமதத் சிந்தையின் கருத்து.

---

## அருள் மிகு வீரமாகாளி சன்னிதானப் பருவ பூசை நாட்கள்

| | | |
|---|---|---|
| 28-10-1985 | திங்கள் | 141-வது பருவ பூசை |
| 26-11-1985 | செவ்வாய் | 142-வது பருவ பூசை |
| 26-12-1985 | வியாழன் | 143-வது பருவ பூசை |
| 24-1-1986 | வெள்ளி | 144-வது பருவ பூசை |
| 23-2-1986 | ஞாயிறு | 145 வது பருவ பூசை |
| 25-3-1986 | செவ்வாய் | 146-வது பருவ பூசை |

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் குறிப்பிட்ட படி வீரமாகாளி சன்னிதானப் பருவபூசைகளில் மாவட்டத்தின் பிரதி நிதியாக ஒரு வராவது கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. மேலும், இந் நாட்களில் ஏனைய மாவட்ட அடியான்கள் பருவப் பூசை நிகழ்த்தல் கூடாது. மேற்குறிப்பிட்ட நாட்களில் முன்போ பின்போதான் பருவபூசைகளை நிகழ்த்த வேண்டும் என்பதே குருவாணை.

—பரமாச்சாரியார்; நெ. சேவுகன்

---

20 வது அறிக்கையின் தொடர் கட்டுரைகள் 21 வது அறிக்கையில் தொடரப்படும். —ஆசிரியர் குழு